Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 7, 2022

திங்கட்கிழமை, பெப்ரவரி 07,2022 | ஒளி: 07 கதிர் 225 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## கேள்வி அதிகரித்தால் மின்வெட்டு அமுல்



மின்சாரத்தின் கேள்விக்கு அமைய மின் வெட்டை அமுல்படுத்து தொடர்பில் இன்றையதினம் (07) தீர்மானிக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளதால்

# ஏமாற்று வேலைகள் அரங்கேறுகின்றன

■ எஸ் தில்லைநாதன்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், அரசாங்கம் பல ஏமாற்று வேலைகளை செய்கிறது என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், இதனை உணர்ந்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

“தமிழ் அரசியல் கைதிகள் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களை விடுதலை செய்ய அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. சர்வதேச ரீதியில் வருகின்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு பல ஏமாற்று நடடிக்கைகளை இலங்கை அரசாங்கம் செய்கின்றது.

தொடர்ச்சி P2



### கடந்த 5 வருட அழிவுக்கு

## அநுர, ரணில், சஜித் பொறுப்பேற்க வேண்டும்

கடந்த ஐந்து வருடங்களில் செய்யப்பட்ட அழிவுகளுக்கு அநுர, ரணில், சஜித் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அரசியல் வரலாற்றில் மிகவும் தோல்வியடைந்த அரசியல்வாதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்றும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## சடலங்கள் மீது அரசியல் செய்ய முயலாதீர்கள்

மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தைப் பெற முயற்சிக்க வேண்டாமென தெரிவிக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மின்சாரப் பிரச்சினைக்குப் பின்னால் சதி இருக்கிறது எனவும் மக்களைக் கொன்று, சடலங்களை வைத்து அரசியல் செய்ய முயல வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.



தொடர்ச்சி P2



## 2,438 நிலையங்களில் உ/த பரீட்சை ஆரம்பம்

### கொரோனாவுக்கு 29 விசேட பரீட்சை நிலையங்கள்

■ சகா

கடந்தாண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெறவிருந்து கொரோனாத் தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டு வந்த 2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று (07) ஆரம்பமாகவுள்ளது.

இன்று தொடக்கம் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 2,438 பரீட்சை மத்திய நிலையங்களில் உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

2021 க்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள கொரோனா தொற்றுடைய பரீட்சார்த்திகளுக்காக வைத்தியசாலைகளில் 29 விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### புது டெல்லியை சென்றடைந்தார்

# அமைச்சர் பீரிஸ்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா பயணமான, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், புது டெல்லியை நேற்று (06) வந்தடைந்துள்ளார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

தொடர்ச்சி P2



# வாழைச்சேனையில் காஸ் அடுப்பு வெடித்தது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

சமையல் எரிவாயு அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்கள், அண்மைய காலங்களில் இடம்பெறாமல் இருந்த நிலையில், நேற்று (06) பிற்பகல் 12.30 மணியளவில் காஸ் அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் வாழைச்சேனையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## இரண்டு நாடுகளிடம் கடன் பெறுகிறது இலங்கை

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதிக்கு தேவையான அத்தியாவசிய உணவு பொருட்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வதற்காக இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் கடன் உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.




தொடர்ச்சி P2

### ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சுற்றி

## புத்தாண்டுக்கு முன் 10 தொழிற்சாலைகள்



தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சுற்றி, சீமெந்து மற்றும் உருக்கு உற்பத்தி உட்பட பத்து புதிய கைத்தொழில் தொழிற்சாலைகளைத் திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டையில் நேற்று (06) காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர், மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# மாஜி மந்திரிகள், மனைவிகளுக்கு பாதுகாப்பு

### ரூ.150 மில். செலவிடுகிறது அரசாங்கம்

முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்கள், முன்னாள் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், பிக்குகள், உயிரிழந்த சில அரசியல்வாதிகளின் மனைவிமாரின் பாதுகாப்புக்காக அமைச்சர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகள் (M.S.D) 245 பேர் காணப்படுவதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிப்பதாக நாளேடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு அதிகாரிகளை வழங்குவதற்காக அரசாங்கத்துக்கு வருடாந்தம் 150 மில்லியன் ரூபாய் செலவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு எம்.எஸ்.டி பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளவர்களுள் தேர்தல்களில் தோல்வியடைந்த அமைச்சர்,

தொடர்ச்சி P2

## சபையைக் கூட்ட இன்று கூட்டம்

நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைகளுக்கு மத்தியில் உரிய சுகாதார ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கும், எதிர்வரும் அமர்வுகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள அலுவல்கள் குறித்து ஆலோசிப்பதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, இன்று திங்கட்கிழமை (07) கூடவுள்ளது.

தொடர்ச்சி P2



# பல துறைகளிலும் மா:.பியா உள்ளது



நிதி ஒழுக்கம் இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதா, இல்லையா என்ற கேள்வி எழுந்திருக்காது என்று தெரிவித்த முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வளர்ச்சியை தடுக்கும் மாஃபியா பல துறைகளில் உள்ளது தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மேலும் அவர் தெரிவித்தாவது, கிடைக்கக்கூடிய சிறந்த விருப்பத் தெரிவை முடிவு செய்து அதை மிகவும் பயனுள்ள முறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

விலை சூத்திரங்கள் நாட்டுக்கு சிறந்தல்ல எனவும் விலை ஸ்திரத்தன்மைதான் சிறந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த மாஃபியாவால்தான் மின்துறை நெருக்கடி ஏற்படுகிறது என்றும் தானும் மின்சக்தி அமைச்சராக இருந்தபோது இந்த மாஃபியாவை எதிர்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

### சுகாதார தொழிற்சங்கங்கள்

# காலவரையற்ற வேலைநிறுத்தம்

### அரச வைத்தியசாலை பணிகள் முடங்கும் அபாயம்




சுகாதார சேவையில் உள்ள பல தொழிற்சங்கங்கள், இன்று (07) காலை 7 மணி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளதால் அரச வைத்தியசாலைகளின் பல பணிகள் முடங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வுகூட செயற்பாடுகள், பரிசோதனைகள், மருந்து விநியோகம் மற்றும் சிகிச்சைப் பரிசோதனைகள் உள்ளிட்ட பல பணிகள் இன்றையதினம் இடம்பெறாது என்று அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## இன்னும் கடன் பெறவே இந்தியா செல்கிறார் பீரிஸ்



இந்தியாவுக்கு விஜயம் செய்யும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், அந்நாட்டிடம் இருந்து அதிக கடனை பெறுவது குறித்தும் கவனம் செலுத்துவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க, தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர், தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஏமாற்று வேலைகள் அரங்கேறுகின்றன

குறிப்பாக பயங்கரவாத தடுப்புச் சட்டமானது, சர்வதேச நியமங்களுக்கு முரணான - மோசமான சட்டம் என்பதை ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறுபட்ட சர்வதேச சமூக அமைப்புகள் பல்வேறுபட்ட விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்துள்ளன.

இது தொடர்பான குற்றச்சாட்டுகளை நாங்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். இத்தகைய நிலையில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தாங்கள் இதனை மாற்றி அமைப்போம் என்று வாக்குறுதிகளை வழங்கி உள்ளார்கள்.

ஆனால், இன்று வரை அந்த சட்டம் மாற்றி அமைக்கப்படவில்லை. எங்களுடைய நிலைப்பாடு இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

இந்த சட்டம் முழுமையாக நீக்கப்படும்போது அதன் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அரசாங்கம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றி அமைக்கிறோம் என்று கூறிக்கொண்டு பலவித ஏமாற்று வித்தைகளை செய்துவருகின்றது.

குறிப்பாக கடந்த ஒரு வருடத்தில் 16 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். ஆறு மற்றும் எட்டு மாத காலப்பகுதிக்குள் விடுவிக்கப்பட வேண்டியவர்களையே அரசாங்கம் விடுவித்தது.

மாறாக நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் மற்றும் நீண்டகால கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை.

புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் பிரபாகரனின் படத்தை பதிவேற்றினார்கள் என்ற குற்றச்சாட்டுகளில் சுமார் 100 பேர் வரை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர்கள் நெருங்கி வருகின்ற வேளையில் இவர்களை விடுவித்து, அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை போன்று போலியான முகத்தை காண்பிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சர்வதேச சமூகம் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான கண்காணிப்பை செய்ய வேண்டும் என்றார்.

## கேள்வி அதிகரித்தால் மின்வெட்டு அமுல்

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க மேலும் தெரிவிக்கையில், உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தின் அளவுக்கேற்ப பரிந்துரைகள் முன்வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

நாளாந்த மின் தேவை 2,750 மெகாவோட்டுக்கு அதிகமாக காணப்படுமாயின் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் இதற்கமைய தரவுகள் சேகரிக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மின்னுற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களின் அளவு, மின்சாரத்துக்கான தேவை மற்றும் விநியோகம் என்பவற்றின் அளவுகள் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் இதற்கமையவே மின்வெட்டு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றார்.

தற்போது தேவைக்கு ஏற்ற அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படாமல், கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி தன்னிச்சையாக அமுல்படுத்தப்பட்ட மின்வெட்டுக்கு யார் பொறுப்பு என்பது தொடர்பில் ஆணைக்குழு கவலையடைவதாகத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் மற்றும் மின்விநியோக அத்தியட்சகர் ஆகியோர் மின்வெட்டு தொடர்பில் அறிந்திருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அநுர, ரணில், சஜித் பொறுப்பேற்க வேண்டும்

நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் (05) பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

கொரோனா வரும் போது ரணிலும் மைத்திரியும் இருந்தால் என்ன? என்று கேட்கின்றனர் அவர்கள் இருந்திருந்தால் கடவுள் தான் காப்பாற்றியிருக்க வேண்டும் என்றார்.

ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையிலான சண்டையில் இறந்தவர்களை வீதியில் தான் புதைத்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைமையும், அநுரவுக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொரடா பதவியும் வழங்கப்பட்டமையை சுட்டிக்காட்டினார்.

அவர்களுக்கு 4 எம்.பி.க்கள் இருந்ததாகவும் தங்களிடம் 58 பேர் இருந்த போதும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கொரோனா நெருக்கடியுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் நாங்கள் சில பணிகளைச் செய்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

தொற்றுநோய் காரணமாக இலங்கை வெளிநாட்டு வருவாயின் பல வழிகளை இழந்துள்ளது, இதில் சுற்றுலாத் துறையின் அதிகபட்ச பங்களிப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வரும் பணம் ஆகியவை அடங்கும் என்றார்.

இவ்வாறான விடயங்களினால் அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரிசி விலை அதிகம், எரிவாயு கிடைப்பது கடினம், பால்மா தட்டுப்பாடு, மக்கள் வாழ்வது சிரமம் என்பதை நாம் அறியாமல் இல்லை என்று தெரிவித்த அவர், சமுர்த்தி பெறுவோருக்கு 240 பில்லியன் ரூபாயும், அரச ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், படையினர் ஆகியோருக்கு 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## 2,438 நிலையங்களில் உ/த பரீட்சை ஆரம்பம்

பாடசாலை மற்றும் தனிப்பட்ட ரீதியில் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பேர் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

மேலும், 316 இணைப்பு மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மாணவர்களுக்காக இரண்டு விசேட அறைகள் வீதம் ஒவ்வொரு பரீட்சை மத்திய நிலையத்திலும் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக 29 வைத்தியசாலைகளில் பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்தகைய வைத்தியசாலைகளின் பட்டியல் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தலில் இருக்கும் பரீட்சார்த்திகள் தங்களுடைய அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்துக்குச் சென்று தனிமைப்படுத்தலில் இருப்பதை சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

பின்னர் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களின்படி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட தேர்வு மையத்தில் பரீட்சை எழுத வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட அல்லது தற்போது தனிமைப்படுத்தலில் உள்ள விண்ணப்பதாரர்கள் மேலதிக தகவல்களை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து அல்லது 1911 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை மையங்கள் எதுவாக இருந்தாலும் பரீட்சை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன வலியுறுத்தியுள்ளார்.

## புது டெல்லியை சென்றடைந்தார் அமைச்சர் பீரிஸ்

தனது இரண்டு நாள் விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்துடன் பரந்த அளவிலான கலந்துரையாடல்களை அமைச்சர் பீரிஸ் நடத்த உள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் தனது விஜயத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் மற்றும் ஏனைய இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளுடன் புது டெல்லியில் பேச்சுவார்த்தை நடத்துவுள்ளார்.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, புது டெல்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சில வாரங்களுக்குப் பின்னர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ளார்.

இந்தியாவிடமிருந்து பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு ஏற்கெனவே இந்தியா நிதி உதவி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இரண்டு நாடுகளிடம் கடன் பெறுகிறது...

இதற்கமைய இந்தியாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலரையும் அவுஸ்திரேலியாவிடம் இருந்து 200 மில்லியன் டொலரையும் கடனாக பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

அரிசி, பருப்பு மற்றும் மருந்து உட்பட அத்தியாவசிய பொருட்களை இந்த கடன் உதவிகளின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், குறித்த இறக்குமதிகள் 6 மாதங்களுக்கு போதுமானதாக இருக்கும் எனவும் இந்தியாவின் கடன் உதவியின் கீழ் கிழங்கு, வெங்காயம், பருப்பு மற்றும் மருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கடன் உதவிகளை தவணை அடிப்படையில் மீள செலுத்துவதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்பை பதப்படுத்துவதற்கான தொழிற்சாலை ஒன்றினை கொழும்பு அல்லது ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினை அண்மித்து நிர்மாணிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரையில் அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் ஐக்கிய அரபு அமீரகத்தில் பதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சடலங்கள் மீது...

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், எரிவாயுப் பிரச்சினையே பின்னால் யாரோ இருப்பதாக சொன்னேன். அப்போது என்னை விமர்சித்தார்கள். இப்போது காஸ் வெடிப்பதை பார்த்திருக்கிறீர்களா? என்று கேள்வியெழுப்பினார்.

பேஸ்புக்கிலுள்ள அனைத்து ஜே.வி. பிகாரர்களும் என்னைக் குற்றம் சாட்டத் தொடங்கினர். கெட்ட வார்த்தையில் அவர்கள் என்னை ஏசினார்கள். பேஸ்புக் ஊடாக ஜே.வி. பி.,யின் ஒழுக்கத்தை நீங்கள் நன்றாகக் கவனிக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

மின்சாரத்திலும் இதே போன்ற பிரச்சினை உள்ளது. மாதக்கணக்கில் மூடப்படுகிறது. இந்த மின் நெருக்கடிக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பதை மக்கள் உணரவில்லையா? இதன் பின்னணியில் சதி உள்ளது. ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இடமளிப்பதில்லை . இந்த விடயங்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

மக்களை கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயலாதீர்கள். மின்சாரத்தைத் துண்டித்து அதிகாரத்தைப் பெற முயலாதீர்கள். அவை தவறான செயல்களாகும் எனவும் தெரிவித்தார்.

## இன்னும் கடன் பெறவே இந்தியா செல்கிறார் பீரிஸ்

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது, தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை பொருளாதார ரீதியில் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது என்றும் அரச வருமானம் குறைந்து வரும் நிலையில், அரச செலவுகள் தாங்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷ் போன்ற நாடுகளிடம் அமெரிக்க டொலர்களை இலங்கை பிச்சை எடுத்ததாகவும் தற்போது கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2018 ஆம் ஆண்டில் அரச வருமானம் 1,980 பில்லியன் ரூபாயாக இருந்தது என்று குறிப்பிட அவர், ஆட்சிக்கு வந்தவுடன் 600 பில்லியன் ரூபாய் வரிகளை குறைத்த விதத்தையும் நினைவு கூர்ந்தார்

எவ்வாறாயினும், வருமானத்தை விட தற்போது அரச செலவினம் மூன்று மடங்கு அதிகம் என்றும் இவ்வாறான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை உள்ள நாட்டின் எதிர்காலம் குறித்தும் கேள்வி எழுப்பினார்.

அரிசியை இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை விமர்சித்த அவர், சீனா மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி மூலம் மக்களுக்கு விஷம் ஊட்டப்படுவதாக குறிப்பிட்டார்.

அரசாங்கம், சரியானதைச் செய்வதைப் பற்றி அறிவுரை கூறுவதாகவும் ஆனால் அவர்களே அவ்வாறு செய்யத் தவறியுள்ளமை தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்பினார்.

## மாஜி மந்திரிகள், மனைவிகளுக்கு பாதுகாப்பு

உறுப்பினர்கள் அரசியல்வாதிகளின் மனைவிமாருக்கு வழங்கப்பட்டுள்ளதால் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் இது அந்தப் பிரிவின் நடவடிக்கைகளுக்கு பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விசேடமாக வெளிநாட்டு பிரமுகர்கள் இலங்கைக்கு வருகைத் தரும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மனைவிக்கு 17 பாதுகாப்பு அதிகாரிகளும் மறைந்த முன்னாள் சபாநாயகர் ஒருவரின் மனைவிக்கு இரண்டு அதிகாரிகளும் கொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஒருவரின் மனைவிக்கு இரண்டு அதிகாரிளும் பிரதமரின் வங்கிக் கணக்கிலிருந்து நிதி மோசடி செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிகாரிக்கு இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் பிக்குத் தலைவர்களின் பாதுகாப்புக்காக பிரபுக்களின் பாதுகாப்பு அதிகாரிகள் 38 பேர் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பாரிய நிதி நெருக்கடிக்கு மத்தியில் பாதுகாப்பு தொடர்பில் பாரிய அச்சுறுத்தல் இல்லாதவர்களுக்கு இவ்வாறு பாதுகாப்பை வழங்கி நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

## வாழைச்சேனையில் காஸ்...

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வாழைச்சேனை - 5 தபாலக வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த வீட்டின் பெண்மணி சமையலறையில் உணவு சமைத்துக் கொண்டிருந்த போது காஸ் சிலிண்டரின் வயர் திடீரென தீப்பற்றிக் கொண்டது. சட்டென காஸ் அடுப்பும் வெடித்துச் சிதறியுள்ளது.

சிலிண்டருக்கும் காஸ் அடுப்புக்கும் இடையிலான இணைப்பு அவசரமாக துண்டித்ததன் காரணமாக பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டது என வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்றிருந்த வாழைச்சேனை பொலிஸார். இவ்வனர்த்தம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சபையைக் கூட்ட...

இந்தக் கூட்டம், பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் திங்கட்கிழமை (07) பிற்பகல் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஜனகாந்த சில்வா தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றம் எதிர்வரும் 08ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கூடவிருப்பதுடன், 11ஆம் திகதி வரை நான்கு நாட்கள் அமர்வுகளை நடத்துவதற்கு இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதற்கும், இதன் பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு 08ஆம் திகதி கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமீபத்திய வாரங்களில் 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் 30க்கும் மேற்பட்ட பாராளுமன்ற பணியாட் தொகுதியினரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## புத்தாண்டுக்கு முன்னர்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சுயதொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும் என நம்புவதாக தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் தொழில் பயிற்சிகளை மேம்படுத்துவதற்காக 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

தொழில் முனைவோர் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கவும், அரசாங்கத்தால் கட்டப்படும் வீட்டுக் கடைகளில் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்தவும் வாய்ப்பு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நிதி நெருக்கடியுடன் அரசாங்கம் இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், ஆனால் சமுர்த்தி கொடுப்பனவுகள் மற்றும் அரச துறையின் சம்பளங்களை தொடர்ந்தும் வழங்குவதற்கு அரசாங்கம் சமாளித்து வருவதாகவும் தெரிவித்தார்.

## காலவரையற்ற வேலைநிறுத்தம்

எனவே, வைத்தியசாலைகளுக்குச் செல்லும் போது இன்றைய நிலைமைகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சிறுவர் வைத்தியசாலைகள் மற்றும் மகப்பேறு வைத்தியசாலைகளில் இந்த வேலைநிறுத்தம் அமுலில் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற ஆபத்தான நோயாளர்களுடன் நெருக்கமாகக் கையாளும் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்க மாட்டார்கள் என்று அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிநுட்பவியலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதன் காரணமாக அரச வைத்தியசாலைகளில் எக்ஸேஸ்ர ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன், அஞ்சியோகிராம், சிடி மற்றும் பெட் ஸ்கேன் ஆகியவை நடத்தப்படாது என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# பெரிய கத்தியை பார்த்து தப்பியோடிய நபர்

பேக்கரிக்கு வருகைதந்த நபர், அங்கிருந்த பெண் ஊழியரை, கூரிய ஆயுதமொன்றை காண்பித்து அச்சுறுத்த முயன்றுள்ளார். தன்னை சுதாகரித்துக்கொண்ட அப்பெண், பாண் வெட்டும் கத்தியை காண்பித்து பதிலுக்கு அச்சுறுத்தியுள்ளார். இதனால், அந்நபர், அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இந்த சம்பவம் ஹக்மன பிரதேசத்திலுள்ள பேக்கரியில் இடம்பெற்றுள்ளது.

தான் வைத்திருந்த கூரிய ஆயுதத்தை விடவும் பெரிய கத்தியை அப்பெண் வைத்திருந்ததைப் பார்த்தே அந்த நபர் தப்பியோடியுள்ளார் எனத் தெரியவருகிறது என்று கூறிய ஹக்மன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வர்த்தக நிலையத்துக்கு வருகைத் தந்திருந்த சந்தேகநபர் தப்பிச் செல்வதற்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் பொலிஸாருக்கு அப்பெண் வழங்கியுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





மீனவர் பிரச்சினையில்

# இலாபம் தேட இடமளியோம்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையில் அரசியல் இலாபம் தேட எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை என அகில இலங்கை மீனவர் மகா சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் நெல்சன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை -இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நான்கு வழிகளில் தீர்வுகளை எட்டுவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். முதலாவதாக இராஜதந்திர ரீதியாகவும், இரண்டாவதாக இந்திய உயர்ஸ்தானிகருக்கு கடற்றொழில் அமைச்சின் ஊடாக அறிவிக்கவும், இரு நாட்டு மீனவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கவும் தீர்மானித்துள்ளோம் என்றார்.

மூன்றாவதாக இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைபவர்களை எந்த நாடாக இருந்தாலும் சரி அவர்களை கைது செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

நான்காவதாக இலங்கைக்குள் அத்துமீறி நுழையும் படகுகளை கைப்பற்றி அவற்றை உள்நாட்டு மீனவர்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்படும் என அமைச்சர் அறிவித்துள்ளார். இந்நிலையில், இரு நாட்டு மீனவர் பிரச்சினையில் எவருக்கும் அரசியல் இலாபம் தேட இடமளிக்கப்போவதில்லை என்றார்.

# மாலத்தீவு மாணவனின் சடலம் வெள்ளவத்தையில் மீட்பு

வெள்ளவத்தை கடற்கரையில் மீட்கப்பட்ட இரண்டு சடலங்களில், ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மாலத்தீவு மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது உடலில் வெட்டுக்காயங்கள் பல காணப்படுகின்றன.

தெஹிவளையில் வசித்து வந்த மாலத்தீவு மாணவரான அப்ஹம் நாசீர், காணாமல் போயுள்ளதாக மாலதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், அந்நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றார்.

இதன்படி மாணவரின் உறவினர்கள் அவரை இறுதியாக கடந்த 04 ஆம் திகதி கண்டுள்ளனர். இதன்போது அவர் கறுப்பு நிற மேற்சட்டையை அணிந்திருந்துள்ளார்.




# துப்பாக்கிச் சூட்டில் கடற்படை வீரர் காயம்

இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்படை வீரர்களில் ஒருவர், தற்செயலாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு வீரரொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹொரவப்பொத்தா னையில் உள்ள காட்டில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த திருகோணமலை சம்பூர் கடற்படை முகாமைச் சேர்ந்த வீரர், அநுராதபுரம்



போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 05ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவப் பயிற்சி இன்றுடன் நிறைவு பெறும்.

# மரண பயத்தை மஹிந்த இல்லாதொழித்தார்

நாட்டு மக்களிடம் காணப்பட்ட மரண பயத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

வே இல்லாதொழித்தார் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டு மக்கள் தங்களது கரங்களில் மரணசான்றிதழ்களை வைத்திருந்தபோதே தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

ஜனாதிபதியாக பதவியேற்றிருந்தார். அவர் பதவியேற்று நாட்டு மக்களிடம் காணப்பட்ட மரண பயத்தை இல்லாதொழித்தார் என்றார்.

நாட்டில் டொலர் தட்டுப்பாடு நிலவிய காலத்திலும் நாட்டு



மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

வெளிநாடுகளில் இருந்து தடுப்பூசிகளை கொள்வனவு செய்தார் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலேயே நாட்டுக்கு தடுப்பூசிகள் கிடைத்தன. ஜனாதிபதி அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியுள்ளார் என்றார்.

# டெங்குவும் கொரோனாவும் ஒன்றாக தொற்றலாம்

எவருக்காவது காய்ச்சல் 24 மணித்தியாலங்களாக இருக்குமாயின், வைத்தியசாலைக்கு உடனடியாக செல்ல வேண்டும் என தெரிவிக்கும் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர, டெங்குவும் கொரோனாவும் ஒன்றாக ஒரேநேரத்தில் வரலாம் எனவும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் பரவுகின்ற நிலையில் டெங்கு தொடர்பிலும் அவதானம் செலுத்துவது முக்கியமானது. ஒருவருக்குக் காய்ச்சல் காணப்படுமாக இருந்தால் அவருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சலும் கொரோனா வைரஸ்



தொற்றும் ஒரே நேரத்தில் வரலாம். எவருக்காவது காய்ச்சல் காணப்படுமாக இருந்தால் 24 மணித்தியாலங்களுக்குள் உடனடியாக அந்த நபர் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என்றார்.

இவ்வாறு வைத்தியசாலைக்கு செல்லும் பட்சத்தில் வைத்தியர்கள் அவருக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனைகள் தொடர்பில் தீர்மானிப்பார்கள் எனவும் கூறினார்.

# கும்பாபிஷேக குடமுழுக்கு







சிலாபம் , முன்னேஷ்வரம் ஸ்ரீ அதர்வண மஹா பத்ரகாளி பிரத்யங்கிரா தேவி பீடம் நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா நேற்று (06) நடைபெற்றது.

( படங்கள் – ரஸீன் ரஸ்மின்)

ஆரோக்கியமான சூழலுக்காக

# மரநடுகை திட்டத்தை SLT–MOBITEL ஆரம்பித்துள்ளது

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பாடல் சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, நாடளாவிய ரீதியில் “நாடு முழுவதிலும் சுவாசமும் உரமும் பயிரிடுவோம்” எனும் மர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. காற்றின் தரத்தை மேம்படுத்தவும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும் நிலைபேறான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான உறுதியான அர்ப்பணிப்பாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மொனராகலை, மீயாகல ஸ்ரீ மெத்தாராம விஹாரையில் இந்தத் திட்டம் அண்மையில் SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்ணான்டோ, SLT குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT-MOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிராந்தியத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் நாட்டிலுப்பை (Madhuca Longifolia) மரத்தை இந்தத் திட்டத்துக்காக SLT-MOBITEL தெரிவு செய்திருந்தது. இயற்கை பீடை கட்டுப்படுத்தியாக அமைந்திருப்பதுடன், சேதன உர தயாரிப்புக்கு பங்களிப்பு வழங்குவது, வளியை தூய்மையாக்குவது மற்றும் மூலிகை மருந்து வகைகள் தயாரிப்பில் பங்களிப்பு வழங்குவது போன்றவற்றைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சியின் முதல் அங்கமாக, மீயாகல ஆரம்ப பாடசாலையில் நாட்டிலுப்பை தாவரக் கன்றுகள் நடப்பட்டன. மீயாகல கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு 500 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் தொடர்பாக SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், நாம் சுவாசிக்கும் காற்றின் தரத்தை மேம்படுத்துவது, காலநிலை மாற்றத்துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் எமது பொதுவான சுகாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவது போன்றவற்றில் பங்களிப்பு வழங்குவதற்கு எம்மை உறுதியாக அர்ப்பணித்துள்ளோம்.” என்றார்.

SLT-MOBITEL இன் சூழல், சமூக மற்றும் ஆளுகை நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக அமைந்துள்ள மர நடுகைத் திட்டத்தினூடாக, வனாந்தரங்களை ஊக்குவித்தல், இயற்கை காபன் சமநிலையை பேணி, பச்சை இல்ல வாயுக்களை குறைத்தல், வளி சுத்திகரிப்புக்கு பங்களிப்பு வழங்கல், உயிரியல் பரம்பலை பாதுகாத்தல், சேதன உரத்தை தயாரித்தல் மற்றும் பொது மக்கள் மத்தியில் நாட்டிலுப்பை மரங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், SLT-MOBITEL இனால் மர நடுகைத் திட்டங்களை ‘Thuru’ App ஊடாக கண்காணிப்பதுடன், ஒவ்வொரு மரத்தின் வளர்ச்சியையும் கண்காணிக்கக்கூடிய டிஜிட்டல் தீர்வாக அமைந்துள்ளது. அதனூடாக, மர நடுகைத் திட்டத்தின் வினைத்திறனை கண்காணித்துக் கொள்ள முடியும்.

சமூகத் தாக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் SLT-MOBITEL இனால் மீயாகல ஆரம்ப பாடசாலை நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்புச்





செய்யப்பட்டிருந்தன. கிராமிய பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்த, “மனமிருந்தால் புத்தகமொன்றை வழங்குங்கள்” எனும் நிகழ்ச்சியின் அங்கமாக இது அமைந்திருந்தது.

சூழல் சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் SLT-MOBITEL, நிலைபேறான சூழல் பாதுகாப்பு திட்டத்தை ஸ்ரீ லங்கா ப்ரீமியர் லீக் 2020 இடம்பெற்ற காலப்பகுதியில், ‘SLT Mobitel Green Premier League’ (GPL) என்பதை ஆரம்பித்திருந்தது. ஒவ்வொரு போட்டியின் போதும் வெற்றியீட்டும் அணியினால் குவிக்கப்படும் ஓட்ட எண்ணிக்கைக்கு நிகரான மரக் கன்றுகளை நடும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

# தங்கச் சங்கிலி பறிப்பு

துசித குமார டி சில்வா

தர்கா நகரத்திலுள்ள வராப்பிடிய பாடசாலையில் சந்தியில் வைத்து, மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை, இருவர், பறித்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே, சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர் என்றும் அவ்விருவரையும் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அபகரிக்கப்பட்ட தங்க சங்கிலியின் பெறுமதி, ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் எனவும், மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த அந்தப் பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

கோபரேடிவ் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் - PB 834

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 11(3) கீழ் 2021 ஜுன் 30 ஆம் திகதி முதல் கோபரேடிவ் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது அதன் பிரகாரம் கோபரேடிவ் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் எனும் பெயரை கோபரேடிவ் இன்சுரன்ஸ் கம்பனி பிஎல்சி என மாற்றப்பட்டு 2021 ஜுன் 30 ஆம் திகதி முதல் உடனடியாக அமுல்படுத்தப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனி செயலாளர்கள்
கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி

# பிரித்த சக்திகளே பிரிக்கின்றனர்

■ நூருல் ஹுதா உமர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மூலம் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் பிரித்த அதே சக்திகள் இன்று இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்று சிந்திக்க நேர்ந்துள்ளது என்று தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா எம். பி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர பிதா அதாவுல்லா அஹமட் ஷக்கியின் தலைமையில் அக்கரைப்பற்று புதிய நீர் பூங்காவில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நாட்டின் 74 ஆவது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு



தெரிவித்தார்.

இலங்கை திருநாட்டில் இறைவன் அருளால் அனைத்து வளங்களும் நிறைய பெற்று இருக்கின்றன. இதனால் உலக நாடுகளும், உலகில் உள்ள சண்டியர்களும் எமது நாட்டையும், எம்மையும் அடிமைப்படுத்தி வைத்திருக்க முயல்கின்றனர். எமக்கு 74 வருடங்களுக்கு முன்னர் சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆனால், எம்மை நிம்மதியாக வாழ விடுகின்றார்கள் இல்லை. நாம் சுதந்திரம் அடைந்த பிற்பாடுகூட இந்த நாட்டின் அரசியலமைப்பு, பொருளாதார கொள்கை ஆகியவற்றில் வல்லரசுகள் தலையிட்டு கொண்டே உள்ளன என்றார்.

இன ஒற்றுமை சீர்குலைக்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக தாக்கப்பட்டவர்களாகவும், பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியாதவர்களாகவும் நாம் தொடர்ந்தும் இருந்து வருகின்றோம். வல்லரசுகளின் ஆக்கிரமிப்புகள் தற்போது மிக தந்திரமான முறைகளில் நடத்தப்பட்ட வண்ணம் உள்ளன. வெளிநாடுகளின் ஒத்திசைவோடு தான் ஈழ போராட்ட குழுக்கள் செயற்பட்டன. சகோதர படுகொலைகளும் நடந்தன. உரிமையின் பெயரால் இரத்த ஆறு ஓடியது. மனிதர்களை மனிதர்கள் 35 வருடங்களாக கொன்றனர். இனவாதம், இன துவேசம், இன கலவரம் மூலம் நாட்டை கைப்பற்றுகின்ற பாரிய வியூகம் முன்னெடுக்கப்பட்டது என்றார்.

# இனவாதத்தை ஒழிக்கவேண்டும்

## கிளிநொச்சியில் சீலரத்ன தேரர்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

நாட்டில் இனவாதத்தை ஒழிக்க அனைத்து சிங்கள, தமிழர்களும் ஒன்றிணைய வேண்டும் என பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில், நேற்று (06) இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த சுதந்திர நாட்டில் இனவாதத்தை ஒழிக்க அனைத்து சிங்கள, தமிழர்களும் ஒன்றிணைய வேண்டும். எங்களைப் பிரிப்பவர்கள் அரசியல்வாதிகள் அப்படியானால் இனவாதத்தை விதைக்கும் அனைத்துக் கட்சிகளையும் அகற்றிவிட்டு ஜனசேத பெரமுனவுடன் ஒன்றிணையுமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்.



இனிமேலாவது ஒரு பயங்கரவாதியை இந்த நாட்டிற்கு கொண்டு வருவதற்கு இடமளிக்க மாட்டோம் அல்லது அனுமதிக்க மாட்டோம் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தொலைநோக்கு பார்வை இல்லாததால் மீன்பிடி தொழில் தற்போது முற்றாக அழிந்துள்ளது. ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கக் கூடியவர்கள் அவரைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## சுதந்திர தினத்தன்று




அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில், சுதந்திர தினத்தன்று கரைவலை மீனவர்களால் அதிகளவிலான மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.
கொவிட்–19 தொற்று, கடல் அலையின் சீற்றம் ஆகியன காரணமாக கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியாத நிலையில் மிகவும் கவலையுடன் காணப்பட்ட கரைவலை மீனவர்கள், சுதந்திர தினத்தன்று மிகவும் சந்தோசமான நிலையில் காணப்பட்டனர்.
(அஸ்ஹர் இப்றாஹிம்)

# ஹெரோயின் சிக்கியது

■ தீஷான் அஹமட்

திருகோணமலை - உப்புவெளி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது 5,450 மில்லி கிராம் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் 22 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டார்.

வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர், செல்வநாயகபுரம், திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவராவார். சந்தேகநபர், உப்புவெளி பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றனர்.




## மன்னார் மாவட்டத்தில்

# கொரோனா கூடியது

■ எஸ்.றொசேரியன் லெம்பெட்

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. கடந்த 5 நாட்களில் மாவட்டத்தில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (6) விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், மன்னார் மாவட்டத்தில் சனிக்கிழமை(5) மேற்கொள்ளப்பட்ட பீ.சி. ஆர்.பரிசோதனையில் 41 கொரோனா தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 5 நாட்களில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் 398 கொரோனா தொற்றாளர்களும் மாவட்டத்தில் தற்போது வரை 3,581 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதுவரை 36 கொரோனா மரணங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

# ஐஸ் சிக்கியது; மூவர் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பெட்

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி எருக்கலம் பிட்டி பகுதியில், இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் சுமார் ஒரு கிலோ 76 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனையிட்ட போது, அந்த மோட்டார் சைக்கிளில் வைத்து கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார் ஓடோவொன்றும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட மூவரும் மன்னார், பேசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த மன்னார் பொலிஸார், கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் கணிக்கப்பட்ட பெறுமதி 08 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது.

# இளைஞன் மரணம்

■ எம்.றொசாந்த்

கரவெட்டி, விக்னேஸ்வரா கல்லூரிக்கு முன்பாகவுள்ள வயலில் தனது சகோதரருடன் வேலை செய்து கொண்டிருந்த கலட்டி கீரிப்பல்லி பகுதியை சேர்ந்த விக்கினேஸ்வரமூர்த்தி நிதர்சன் (வயது 26) திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அவரை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு சென்ற போதிலும், வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

## கொவிட் பரீட்சை நிலையங்கள்

# கிழக்கில் நான்கு

■ சகா



இன்று (7) திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சாத்திகளுக்கு விசேடமாக நான்கு(04) பரீட்சை நிலையங்களை அமைக்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட பரீட்சாத்திகளுக்கு பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையிலும் ,கல்முனை கல்வி வலய பரீட்சாத்திகளுக்கு அட்டாளைச்சேனை அயுர்வேத வைத்திசாலையிலும், அம்பாறை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையிலும் ,திருகோணமலை மாவட்ட பரீட்சாத்திகளுக்கு குச்சவெளியிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலையிலும் பரீட்சையை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.



# உதயதேவி தடமேறியது

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

சனிக்கிழமை(05) இரவு தடைப்பட்ட, மட்டகளப்புக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து ஞாயிற்றுக்கிழமை (06) வழமைக்கு திரும்பியதாக மட்டக்களப்பு ரயில் நிலைய பிரதம அதிபர் ஏ.பேரின்பராசா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் வந்த உதயதேவி ரயில், புணாணைக்கும் வெலிகந்தைக்கும் இடையில் தடம் புரண்டதால் இரவு நேர கடுகதி, பாடும்மீன் ரயில் ஆகிய சேவைகளும், அதிவேக ரயில் சேவை மற்றும் கடுகதி ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டிருந்தன.

உதயதேவி ரயில், தண்டவாளத்தில் ஏற்றப்பட்டதன் பின்னர், ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின என்றும் அவர் தெரிவித்தார்.

# தொற்று நீக்கி புகை விசிறினர்

■ வி.ரி. சகாதேவராஜா

இன்று (7) திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கான தொற்றுநீக்கும் புகை விசிறும் செயற்பாடுகள், பல பரீட்சை மத்திய நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டன. காரைதீவு பிரதேசத்தில் உயர்தரப் பரீட்சை நடைபெறும் விபுலானந்த மத்திய கல்லூரியில் காரைதீவு சுகாதாரப் பிரிவினர் புகை விசிறினர்.

## அரசியல் தலையீட்டால்

# அபிவிருத்தியை முடக்காதே

■ ஹஸ்பர்

திருகோணமலை,_கிண்ணியா கொழும்பு பிரதான வீதியின் பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள சிறுவர் பூங்காவில், பெற்றோர்கள் மற்றும் இளைஞர்களால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"சிறுவர் பூங்காவுக்குள் கடைத் தொகுதி அமைக்க வேண்டாம்", "சிறுவர் பூங்கா தேவை" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அது மட்டுமன்றி, "முடக்காதே, முடக்காதே", "அபிவிருத்தியை முடக்காதே", "அபிவிருத்தியில் அரசியல்வாதி தலையிடாதே", "மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்திலேயே சிறுவர் பூங்கா தேவை", "அபிவிருத்தியில் மண்ணை அள்ளிப் போடாதே" ஆகிய கோஷங்களை எழுப்பியதுடன், அவ்வாறு எழுதப்பட்டிருந்த பதாகைகளையும் ஏந்திநின்றனர்.



# கூலர்- ஓட்டோ மோதியதில் சிறுவன் பலி; மூவருக்கு காயம்

■ எஸ்.றொசேரியன் லெம்பெட்

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி,ஓலைத்தொடுவாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

-மன்னார் கொண்ணையன் குடியிருப்பைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தங்கள் கிராமத்தில் இருந்து பேசாலை பகுதியிலுள்ள நடுக்குடா பகுதிக்கு சென்று விட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (5) காலை வீடு திரும்பிக்கொண்டிருந்துள்ளது.

ஓலைத்தொடுவாய் வீதிக்கூடாக ஓட்டோவை திரும்பிய போது தலைமன்னார் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி வேகமாக வந்த மீன் ஏற்றும் கூலர் வாகனம் ஓட்டோவை, பின்புறமாக மோதியுள்ளது. இதில், ஓட்டோ தூக்கிவீசப்பட்டது.

பலத்த காயமடைந்த தாய் சந்தியோகு செல்வி (வயது-30), மகன்களான கெபின் கரன் (வயது -6), கானோர் ( வயது- 1) ஓட்டோ சாரதி ஆகியோர் பேசாலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் தீவிர சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மகன் கெபின்கரன் (வயது -6) மன்னார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துவிட்டார் எனத் தெரிவித்த பொலிஸார், கூலர் வாகனத்தின் சாரதியை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.



## களத்துக்கு நேரடியாகச் சென்ற சுமந்திரன்

# கட்டுவன் மயிலிட்டி வீதியை கண்காணித்தார்

■ எஸ்.தில்லைநாதன்

அடாத்தாக அமைக்கப்படும் கட்டுவன் - மயிலிட்டி வீதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கான வீதியில் 400 மீற்றர் தூரத்தை அபகரித்துள்ள படையினர், வீதியை கைவிட மறுத்தனர். இதனையடுத்து, தனியாருக்குச் சொந்தமான நிலத்தின் ஊடாக தற்போது வீதி நிர்மாணிக்கப்பட்டது. இதனால் சர்ச்சையும் ஏற்பட்டுள்ளது.

சட்டப்படி சுவீகரிக்காது, நில உரிமையாளரின் சம்மதம் இன்றி அவர்களின் கிணறுகளை இடித்து அழித்து அதன் மேல் புதிய வீதி நிர்மாணிக்கப்படுவதை சுமந்திரன் எம்.பி பார்வையிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரோடு நில உரிமையாளர்கள், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், உறுப்பினர் ஹரிகரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 7,000 அதிகாரிகளுக்கு இன்று சுகயீனம்

■ சேஹ்ன் செனவிரத்ன

மத்திய மாகாணத்தில் அரச மற்றும் மாகாண அரச முகாமைத்துவ சேவை அதிகாரிகள் ஒன்றியத்தின் தொழிற்சங்கமானது 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று (7) பணிபகிஷ்கரிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள சகல அரச மற்றும் மாகாண அரச அலுவலகங்களின் கடமைகளிலிருந்து விலகி, சுகயீன விடுமுறையை எடுக்க இத் தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, முகாமைத்துவ சேவை அதிகாரிகள் 7,000 பேர் தமது கடமைகளிலிருந்து இன்று (07) விலகி, சுகயீன விடுமுறையில் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

அதற்கமைய, மத்திய மாகாணத்துக்குரிய கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் சுகயீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அத்தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள பிரச்சினை, தரப்படுத்தல், பதவி உயர்வை உடனடியாகப் பெற்றுக்கொடுத்தல், ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சையை நடத்துதல் உள்ளிட்ட பல விடயங்களுக்கு அரசாங்கம் உடனடியாக தீர்வைத் தரவேண்டும் என்றும் அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முழுமையான சுதந்திரத்தை கொண்டாடுவதற்கு மலையக மக்களுக்கு

# உரிமை இல்லை



■ எஸ்.கணேசன்

இலங்கையின் சுதந்திர தினமானது, மிகவும் கோலாகலமாக கொண்டாட்டமாகவே வருடம் தோறும் கொண்டாடப்படுகின்றதே தவிர, முழுமையான சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்குரிய உரிமை மலையக மக்களுக்கு இல்லை என, மலையக காணி உரிமைக்கான இயக்கத்தின் பிரதான செயப்பாட்டாளர் தங்கவேலு கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே, ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து ஆராய்ந்தாவது, அவர்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுத்து முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

74 வருடங்கள் இந்த சுதந்திர தினத்தினை கொண்டாடுகின்ற நிலையில், மலையக மக்கள் அந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால் இவர்களுக்கு காணி உரிமை இல்லை, வீட்டு உரிமை இல்லை, அரச சேவையினை பெற்றுக்கொள்ளுகின்ற உரிமையில்லை. இன்னும் தோட்ட நிர்வாகத்தின் கீழ் ஓர் அடிமையாக கொண்டு செல்கின்ற ஒரு நிலைமையினை தான் பெருந்தோட்ட சமூகத்தினர் இருக்கின்றனர்.

ஆகவே இந்த சுதந்திர தினத்தினை முற்று முழுவதுமாக கொண்டாட முடியாதவர்களாகவும் அதிலே உள்வாங்கப்பட முடியாதவர்களாகவும் மலையக மக்கள் இருக்கின்றனர்.

சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் காணி உரிமையினை கேட்டு இந்த மக்கள் போராடி வருகின்றனர். அந்த எதிர்பார்ப்பு இன்றும் நிறைவேற்றப்படவில்லை என்றார்.



மலையகத்தில் தொடரும் தீ பரவல்

# பல ஏக்கர் வனப்பகுதிகள் அழியும் அபாயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ, மலைவாஞ்ஞன்

மஹாவலி ஆற்றின் பிரதான கிளை ஆறுகளில் ஒன்றான ஹட்டன் ஓயாவுக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட தீபரவலால் 50 ஏக்கர் வனப்பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளது.

ஹட்டன்- டன்பார் தோட்டத்திலுள்ள குறித்த வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் (5) மாலை 4 மணியளவில் ஏற்பட்ட தீ நேற்று (06) அதிகாலை வரை எரிந்ததாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வனப்பகுதிக்கு கீழே பல தோட்டங்கள் உள்ள நிலையில், அங்கு வசிப்பவர்களுக்கான குடிநீர் இந்த வனப்பகுதியிலிருந்தே விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த இடமான, தலவாக்கலை- சென்கிளையார் நீர் வீழ்ச்சிக்கு அண்மித்த பகுதியில் ஏற்பட்ட தீபரவலால், நீர்வீழ்ச்சியை சுற்றியுள்ள சுமார் 60 ஏக்கர் பற்றைக்காடு தீக்கிரையாகியுள்ளது.

இந்த நிலையில், மத்திய மலை நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவும் வறட்சியுடனான வானிலையைப் பயன்படுத்தி, சில விஷமிகள் இவ்வாறு வனப்பகுதிகளுக்கு தீவைப்பதாகவும் இதனால் மலையகத்தின் பல இடங்களில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# கும்பாபிஷேகம்



நாவலப்பிட்டி- கட்டபுலா உச்சிமலை கீழ்பிரிவு அருள்மிகு ஸ்ரீ சீரடி சாயிபாபா கோவில், மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நேற்று (6) நடைபெற்றது. (படங்கள்- நவி)

# கினலன் பாடசாலைக்கு செயற்பாட்டு அறை



பதுளை- கினலன் தோட்டப் பாடசாலைக்கான செயற்பாட்டு அறையொன்றை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அலட்சியத்தால்

# மூவர் நீரில் மூழ்கி மரணம்

■ எ6.சுமணசிறி குணதிலக



மாத்தறை பிரதேசத்திலிருந்து வெல்லவாய பகுதிக்குச் சுற்றுலா சென்ற அறுவர் அடங்கிய குழுவினருள் மூவர், வெல்லவாய எல்லவெல நீர்வீழ்ச்சியில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (5) இடம்பெற்றுள்ளதுடன், இவ்வாறு உயிரிழந்தவர்கள் மாத்தறையைச் சேர்ந்த 53 வயதான லெஸ்லி குமார, 65 வயதான வொல்டர் நாணயக்கார, 68 ஹேவாகலமுல்லகே சந்திரசிறி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த நீர்வீழ்ச்சியில் "இந்தப் பகுதியில் குளிக்க வேண்டாம்" என எச்சரிக்கை பலகையொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் 3 மாதங்களுக்கு முன்னர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இங்கு உயிரிழந்ததுடன், குறித்த நீர்வீழ்ச்சியில் நீராடிய பலர் இதுவரை உயிரிழந்திருக்கின்றனர் என்று வெல்லவாய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



குடும்பமாக அலைபேசிகளை

# திருடியவர்கள் சிக்கினர்

## தாய்க்கு விளக்கமறியல்; இரண்டு பிள்ளைகளுக்கும் பிணை

■ சுமணசிறி குணதிலக

பிபிலை நகரில் தொலைபேசி விற்பனை நிலையங்களில் பெறுமதி மிக்க அலைபேசிகளைத் திருடிவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய்,மகன் மற்றும் மகள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

மூவரும் நேற்று முன்தினம் (5) கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவித்த பொலிஸார், இவர்களிடமிருந்து 7 அலைபேசிகள் மற்றும் மின்விளக்கும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிபிலை நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் அலைபேசிகளை கொள்வனவு செய்யும் போர்வையில், கடந்த 3ஆம் திகதி, மூவரும் வருகைத் தந்துள்ளனர். எனினும், அலைபேசிகளை கொள்வனவு செய்யவில்லை. எனினும், அலைபேசிகளை திருடியமை அங்கு பொறுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

இதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரும் பிபிலை மற்றும் மெதகம ஆகிய நகரங்களில் உள்ள அலைபேசி விற்பனை நிலையங்களிலிருந்து இரண்டு அலைபேசிகளை திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட அலைபேசிகளுள் ஒன்று, மொனராகலை பிரதேசத்தில் விற்கப்பட்டுள்ளது, திருடப்பட்ட அலைபேசிகளின் மொத்த பெறுமதி 2,23,000 ரூபாய் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் பிபிலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, இன்று (7) வரையில் தாயை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் மக்சிலா சூரியஆராச்சி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு மகள் தோற்றவுள்ளதால் அவரை பிணையில் விடுதலை செய்ததுடன், மகனை கெப்பட்டிபொல சிறுவர் காப்பகத்துக்கு அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளால் சுற்றாடலுக்கு பாதிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வார இறுதி விடுமுறை நாட்களில் நுவரெலியா மாவட்டத்துக்கு சுற்றுலா சென்றவர்களால், சுற்றாடல் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இதற்கமைய, ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் பயணித்த சுற்றுலாப் பயணிகள் வீதியின் இருமருங்கிலும் வீசிச் சென்ற கழிவுகளை சேகரித்து, சுற்றாடலை சுத்தம் செய்யும் வேலைத்திட்டமானது, லிந்துலை பொலிஸார், பிரதேசவாசிகள் மற்றும் தலவாக்கலை- லிந்துலை நகர சபையினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

லிந்துலை பொலிஸ் பிரிவை உள்ளடக்கும் வகையில் லிந்துலையிலிருந்து நானுஓயா பொலிஸ் வரையான வீதியை அடிப்படையாகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளால் வீதிகளில் வீசிச் சென்ற உணவு கழிவுகள், பிளாஸ்டிக், பொலித்தீன், முகக் கவசங்கள் என்பன கட்டாக்காலி நாய்களால் வீதிகளின் நடுவே இழுத்துப் போடப்பட்டிருந்ததுடன், இதனால் சில இடங்களில் துர்நாற்றமும் வீசியதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.



தொ.தே. சங்கத்தின் மகளிர் தினத்தை

# ஹட்டனில் நடத்த ஏற்பாடு



தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் தினத்தை இந்த வருடம் ஹட்டனில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் (5) ஹட்டனில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம்,

தொழிலாளர் தேசிய சங்கம் மே தினம் ,மகளிர் தினம் போன்ற தினங்கள் குறித்த நிகழ்வுகளைத் தொடர்ந்து ஏற்பாடு செய்து வருவதுடன், அண்மையில் பொங்கல் விழாவை மிகச்சிறப்பாக நடத்தியது.

அந்த வகையில் இவ்வருடத்துக்கான மகளிர் தினம் எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி ஹட்டனில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். இந்த நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் அணிக்கு, தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயற்பாட்டாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தொழிலாளர் தேசிய சங்கம் மக்கள் செல்வாக்கு மிக்க ஒரு சங்கமாகும்.

இந்தச் சங்கம் தனது தலைமையில் கட்டுக்கோப்புடன் செயல்பட்டு வருகின்றது.

சங்கத்தின் கட்டுக்கோப்பை மீறி யாராவது செயற்படுவார்களானால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கொடுக்கல் வாங்கல்

# கொலையில் முடிந்தது

■ எஸ்.கணேசன்

கத்துக்குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் தலவாக்கலை பகுதியில் உயிரிழந்துள்ளதுடன், குத்திய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கொடை மடக்கும்புர வடக்கு மலை பிரிவில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் (05) இரவு 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் முருகையா சரவணன் வயது 31 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, உயிரிழந்துள்ளார்.

கொடுக்கல் வாங்கல் காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கத்தியால் குத்திய நபர் தலைமறைவாகியுள்ளார்.

அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸாரும் மற்றும் நுவரெலியா கைரேகை அடையாளப்பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்



# மற்றுமொரு தடை தாண்டலில் அசட்டையாக இருந்துவிடாதீர்கள்

ஒன்றை கடந்து சென்றுவிட்டதன் பின்னர், அந்தப் பருவத்தைப் பற்றி நினைப்பதில் தவறில்லை, அந்தப் பருவத்துக்குள் மீண்டும் போகமுடியாததை நினைக்கும் போதுதான், எவ்வளவுக்கு எவ்வளவு காலத்தையும் நேரத்தை வீணடித்துவிட்டோமென பலரும் யோசித்துக்கொண்டிருப்பர். அவ்வாறானதொரு பருவம்தான் மாணவப் பருவமாகும்.

முதலாம் தரம் முதல், கல்விப் பொதுத் தராதர உயர்தரம் வரையிலும் பயின்ற மாணவர்கள், பல தடைகளைத் தாண்டி வந்திருப்பர், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், இவ்விரண்டில் சாதாரண தரத்தில் தடையைத் தாண்டியவர்கள், உயர்தரத்துக்குச் சென்று, இன்று (07) பரீட்சைக்கு முகங்கொடுக்கவுள்ளனர்.

இரண்டு வருடங்களில் ஆகக் குறைவான மாதங்கள் மட்டுமே பாடசாலைக்குச் சென்று, உரிய காலத்துக்கு அப்பால் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளை வாழ்த்துகிறோம். கொரோனா காலத்தில் வெறுமனே, நிகழ்நிலை (ஒன்லைன்) ஊடாகவே கல்வி பயின்றனர். வகுப்புகளுக்குச் சென்று நேரடியாக கற்பதற்கும் நிகழ்நிலையில் கற்பதற்கு இடையில் கடுமையான வேறுபாடுகள் இருந்திருக்கும்.

குழுவாக இருந்து கலந்துபேசி கற்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருக்கும். எனினும், தங்களைத் தயார்படுத்திக்கொண்டு, காலந்தாழ்த்தி நடத்தப்படும் இப்பரீட்சையில், நல்ல பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்வியைக் கற்பதற்கான முயற்சியைக் கைவிடக்கூடாது.

பரீட்சைகள் காலந்தாழ்த்தப்படும் போது, பரீட்சார்த்திகள் மனரீதியில் சில தாக்கங்களுக்கு முகங்கொடுத்திருப்பர். வீட்டுக்குள்ளே இருந்து கற்றுவிட்டு, பரீட்சை மண்டபத்துக்குச் செல்லும்போது ஒருவகையான படபடப்புகள் ஏற்படக்கூடும். அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, வெல்லவேண்டும்.

ஏனெனில், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதனால், இவ்வாறான நிலைமைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கியம், பரீட்சார்த்திகளுக்கு மட்டுமன்றி ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல, கொரோனா வைரஸ் தொற்றியிருக்கும் பரீட்சார்த்திகளுக்கென விசேட மையங்களும் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ளன. அந்த மையங்களில் இருப்போரும் மனதளராது, பரீட்சைக்குத் தோற்றி வெற்றிபெறவேண்டும்.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு மேல், வீடுகளுக்குள்ளே இருந்துவிட்டு, பரீட்சை மத்திய நிலையங்களுக்குச் செல்லும் ஒவ்வொரு பரீட்சார்த்திகளும், சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றவேண்டும். கொரோனா தொற்றிக்கொள்ளுமாயின், அதற்கான மாற்று ஏற்பாடுகளை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அது பரீட்சார்த்திகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்திவிடும்.

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது, உரிய நேரத்துக்கு வினாத்தாள் விநியோகிக்கப்படவில்லை, சில பரீட்சை மண்டபங்களில் உரிய நேரத்துக்கு வினாத்தாள் வழங்காது, உரிய நேரத்தில் பெற்றுக்கொண்டுவிட்டனர், மொழியை மாற்றிக்கொடுத்துவிட்டனர் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான குற்றச்சாட்டுகள் இப்பரீட்சையில் எழாதவகையில் பார்த்துக்கொள்ள வேண்டியது பொறுப்பானவர்களின் கடமையாகும். ஆகையால், பரீட்சைக்கு முகங்கொடுக்கும் அனைவரும் அசட்டையாக இருந்துவிடக்கூடாது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நாங்கள் நோக்குவது போல் இந்த உலகம் இல்லை. நாங்கள் எண்ணியது போல் எல்லாமே நடப்பதுமல்ல.

ஆனால், நடப்பது எல்லாம் நடந்தேறியபடி இருக்கும். அநியாயம், அக்கிரமம், சட்டமீறல் ஒழிக்கவே நடக்கிறது எனும் மனம் குமையும் சனங்கள் தங்கள் விடிவு நோக்கி விழிகளை விரித்தபடி வாழுகின்றனர்.

எதிர்பாராதவிதமான நல்ல பலன்கள் கிடைத்தே தீரும் எனும் உறுதியை விட்டுவிடலாகாது.

விதி என்பது கூட ஒரு சுழற்சிமுறை சம்பவங்கள்தான். மாறாதநிலை வையகத்தில் இருக்காது. நாகரீகமும், போட்டி அரசியலும், பழைமையின் அருமைகளையும் உணராதவரை உயர்வு நிலையில் நீண்ட தாமதம் ஏற்பட்டே தீரும்.

எதனையும் ஐயம், திரிபுற கற்றிட எமக்குப் பொறுமையும் இல்லை. நல்ல நூல்களை படிப்பதை அரைகுறையில் நிறுத்துகின்றோம். ஆனால், பெறுமதியற்ற விஷயங்களை மணிக்கணக்கில் அநேகர் பேசுகின்றனர். உண்மையைச் சொல்லப்போனால் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது எனும் உணர்வு மந்தமாகவே உள்ளது. இந்த நிலை வரக்கூடாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# "சுதந்திர இலங்கை" - சில எண்ணப்பகிரல்கள்



என்.கே.அஷோக்பரன்

பொருளாதார ரீதியில் இலங்கை தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலையில், தினம் தினம் டொலருக்காக எல்லா நாடுகளிடமும் கையேந்தி நிற்கும் நிலையில், டொலர் இருந்தால்தான் எரிபொருள், எரிபொருள் இருந்தால்தான் மின்சாரம் என அடுத்தநாள் மின்சாரம் இருப்பதன் நிச்சயத்தன்மை இல்லாத நிலையில், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலையும் விண்ணையெட்டிப்பிடிக்குமளவிற்கு உயர்ந்துகொண்டிருக்கும் நிலையில், "கோலாகலமாக" பெரும் இராணுவ அணிவகுப்புக்களுடன், விமான சாகசப் பறத்தல்களுடன், 74வது சுதந்திர தினத்தை கொண்டாடித் தீர்த்திருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

சுதந்திர தினமென்றால் இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் நடக்கிறதுதானே எனச் சிலர் சொல்லலாம். சாதாரணமான நிலைமைகளின் கீழ், இந்தக் கொண்டாட்டங்களும் சாதாரணமானதுதான். ஆனால் இன்றுள்ள பொருளாதார கையறு நிலையில், மக்கள் பணத்திற்கு இந்த வீண் செலவுகள் தேவைதானா என்ற கேள்வியில் நிறைய நியாயங்கள் உள்ளன. இந்த வாதப் பிரதிவாதங்கள் ஒருபுறம் இருக்க, இந்த "சுதந்திரதினத்தின்" அர்த்தம்தான் என்ன? அதனை இலங்கையர்கள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள்? போன்ற கேள்விகளைப் பற்றிச் சிந்தித்தலும் முக்கியமானதாகிறது.

அனேக நாடுகளுக்கு ஒரு தேசிய தினம் இருக்கிறது. அந்தவகையில் இலங்கையின் தேசிய தினமாக சுதந்திர தினத்தை இலங்கையர்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால் இதற்குப் பின்னால் காரணங்களும், அடையாளபூர்வ விடயங்களும் இருக்கின்றன. இந்தியாவை எடுத்துக்கொண்டால், இந்தியா இரண்டு தேசிய தினங்களைக் கொண்டாடுகிறது. முதலாவதாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியா போராடிப் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைக் கொண்டாடும் ஓகஸ்ட்-15 சுதந்திர தினம். அந்த சுதந்திரத்தைத் தொடர்ந்து, இந்தியா தனக்கான அரசியலமைப்பை உருவாக்க கிட்டத்தட்ட இரண்டரை வருடகாலம் எடுத்துக்கொண்டது. இந்தியாவினுடைய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளான 26 ஜனவரி (1950) குடியரசு தினமாக இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. இந்தியா என்ற அரசியல் சிருஷ்டிக்கு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்தான சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ, அதேயளவிற்கு இந்தியாவை ஒற்றைக்குடியரசாக கட்டமைத்த அரசியலமைப்பு அறிமுகமான நாளும் மிக முக்கியமானது. பிரித்தானிய இந்தியாவிற்கு முன்னர், இன்றுள்ளதைப் போன்ற "ஒரு இந்தியா" இருக்கவில்லை. பிரித்தானிய ஏகாதிபத்தியமே, இன்றைய ஒரு இந்தியாவின் சிருஷ்டிகர்த்தா. மக்கட் பல்வகைமை, அடையாளப் பல்வகைமை கொண்ட ஒரு நிலப்பரப்பை, வரலாற்றில் அந்நியர் ஆதிக்கத்திற்கு முன்பதாக ஒருபோதும் முழுமையாக ஓர் அரசாகவோ, ஒரு நாடாகவோ இருக்காத ஒரு நிலப்பரப்பை, ஒரு குடியரசாகக் கட்டியெழுப்புவதென்பது பெரும் தேசநிர்மாணப் பணியாகும். அந்தப் பணிக்கு இந்த இரண்டு தினங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பிரித்தானிய ஏகாதிபத்தியம் என்ற பொது எதிரியை வீழ்த்த, அந்த நிலத்தின் பல்வகைப்பட்ட மக்களிடமும் ஒரு பொது நிலைப்பாடு இருந்தது. அதற்கான அணுகுமுறைகளில் வேறுபாடிருந்தாலும், அந்நிய ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவது என்பதை அம்மக்கள் "இந்தியர்" என்ற அந்நியருக்கு எதிரான சுதேச அடையாளத்தைக் கொண்டு ஒன்றிணையும் புள்ளியானது. அதனால் இந்தியர் என்ற அடையாளத்திற்கு "சுதந்திரதினம்" என்பது அடிப்படையானது. அதுபோல, அந்த சுதந்திரத்தைப் பெற்ற பின்னர், தம்மை ஒரு "சிவில் தேசிய" குடியரசாகக் கட்டியமைப்பதில் இந்திய அரசியலமைப்பே அடிப்படையாக அமைந்தது. ஆகவே அதன் தொடக்கப்புள்ளியை குடியரசு தினமாகக் கொண்டாடுகிறார்கள். நிற்க.

1948 ஃபெப்ரவரி 4ம் திகதி, இலங்கையின் "சுதந்திரதினம்". இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருந்து விடுவித்து, டொனிமினியன் அந்தஸ்த்தைப் பெற்றுக்கொண்டது. "டொமினியன் அந்தஸ்த்தின்" படியும் இலங்கை சம்பிரதாயபூர்வமாக பிரித்தானிய முடியின் கீழ்தான் இருந்தது. இலங்கையின் ஆளுநர், பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்ட, முடியின் பிரதிநிதியே. இந்தியா சுதந்திரம் கிடைத்த 1947 ஓகஸ்ட் 15 முதல் குடியரசாகும் வரை இந்த நிலையில்தான் இருந்தது. ஆனால், இரண்டரை வருடங்களுக்குள் குடியரசு அரசியலமைப்பை ஸ்தாபித்து அவர்கள் குடியரசாகிவிட்டார்கள். இலங்கையின் நிலை அதுவல்ல. பிரித்தானிய பாராளுமன்றம் ஆக்கித்தந்த சோல்பரி அரசியலமைப்பு இலங்கையில் 1972 வரை நடைமுறையிலிருந்தது. அதுவரை நாம் டொமினியனாகவே இருந்தோம். சிறிமாவோவும், அவரது இடதுசாரித் தோழர்களும் ஆட்சிக்கு வந்து 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்படும் வரை, இலங்கை தொழில்நுட்ப ரீதியாக பிரித்தானிய முடியின் கீழ்தான் இருந்தது. ஆகவே இலங்கையின் சுதந்திரதினம் என்ற அடையாளம், இலங்கையர்க்கு எவ்வளவுதூரம் அர்த்தபூர்வமானது என்பது மிக முக்கிய கேள்வியாகிறது. இலங்கையை முழுமையாகக் கைப்பற்ற போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் முடியவில்லை. பிரித்தானியர்தான், கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி, முழுத்தீவையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். ஆனால் கண்டி மன்னனுக்கெதிராக இயங்கிய சில "தேசிய வீரர்கள்", கண்டிய மன்னனை வீழ்த்த, பிரித்தானியரோடு ஒப்பந்தம் போட்டு, கண்டியை பிரித்தானியரிடம் கையளித்ததுதான் வரலாறு. இலங்கையின் "சுதந்திரப் போராட்டத்தை" ஆழமாக அரசினால் அது உரிமைகளைவிட, சலுகைகளுக்கான கோரிக்கையாகத்தான் பெருமளவிற்கு இருந்தது. இந்தியவைப் போல ஒரு பலமான சுதந்திரப் போராட்டம் இலங்கையில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை. அதனால்தான் என்னவோ, இலங்கை 1972வரை டொமினியனாகவே தொடர்ந்தது. ஆனால் 1972ல் இலங்கை குடியரசாக மாறிய மே 22, சிலகாலம் வரையிலும் "குடியரசு தினமாக" இலங்கையின் கொண்டாடப்பட்டது. ஆனால் அது தற்போது மறக்கப்பட்டுவிட்டது. அதற்கு கட்சி அரசியல் காரணமாக இருக்கலாம்.


இந்திய குடியரசு அரசியலமைப்பு பல்வகைப்பட்ட மக்கள் உள்ள ஒரு நிலப்பரப்பை ஒரு "சிவில் தேசிய" குடியரசாகக் கட்டமைக்க உருவானது. ஆனால் இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு அப்படிப்பட்டதா? பெரும்பான்மையினரின் மதத்திற்கு முதலிடமும், பெரும்பான்மையினர் மொழியை ஒரே உத்தியோகபூர்வ மொழியாக அரசியலமைப்பு ரீதியில் பிரகடனம் செய்த அரசியல் யாப்பு அது. ஆகவே இலங்கையிலுள்ள சிறுபான்மையினரை அந்நியராக உணரவைத்த ஒரு அரசியல்யாப்பு பிறந்ததினம் இலங்கையர்களை ஒன்றிணைக்கும் தினமாக அமையாது. அந்த வகையில் மே 22 முக்கியத்துவம் இழந்து, மறக்கப்பட்டமை இலங்கையர்க்கு பெரும் இழப்பல்ல. அந்த அரசியலமைப்பும், சிறிமாவோவின் ஆட்சியின் கீழ் பொருளாதார ரீதியில் இந்நாட்டு மக்கள் அனைவரும், அனைத்து வழிகளிலும் இந்நாட்டின் சிறுபான்மையினரும், குறிப்பாக தமிழர்களும் அனுபவித்த துன்பங்களை பட்டியலிட இப்படி ஆயிரம் பத்திகள் எழுத வேண்டியிருக்கும்.

அப்படியானால், சுதந்திரதினமாவது இலங்கையர்களை ஒன்றிணைக்கிறதா என்ற கேள்வி இங்கு எழுகிறது. இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு பலகாலம் முன்பு, இலங்கையில் "சிலோனீஸ்" எனும் சிவில் தேசக் கட்டமைப்பிற்கான எண்ணங்கள், ஐரோப்பாவில் கல்வி கற்றுத் திரும்பிய பல தலைவர்களிடமும் இருந்தது. ஆனால் 1920-களின் பின்னர் அந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறியமை நாம் காணலாம். பெரும்பான்மை இனத்தேசியவாதத்தின் எழுச்சி, இலங்கைக்குள் இலங்கையர் என்ற சிவில் தேசிய அடையாளம் கட்டியெழுப்பப்பட முடியாத நிலையை ஏற்படுத்தியது. மாறாக இலங்கை அரசியல் இனத்தேசிய அடிப்படைகளில் கட்டமைக்கப்பட்டது. அதன் விளைவுதான் இலங்கை உள்ளுக்குள் உடைந்துபோய் நிற்கிறது. சுதந்திரதினத்தில் தமிழிலும் தேசிய கீதம் பாடவிடாது செய்தததை பெரும் வெற்றியாகப் பறைசாற்றும் அரசியல்தான் இந்நாட்டு மக்களை ஒருதாய் மக்கள் என்று பசப்புவார்த்தைகள் பேசுகிறது. சொல் ஒன்று, செயல் வேறு. அதுதான் இந்நாட்டின் போலி அரசியல். சுதந்திரதின மேடையும், இந்த அரசியல் நாடகத்திற்கான இன்னொரு அரங்கமாக அமைகிறதேயன்றி, சுதந்திரத்தின் மெய்யுணர்வு அங்கே இல்லை. பெரும்பான்மைத் தேசிய அரசியல் முழங்கலுக்கான மேடையாக அது மாற்றப்பட்டுவிட்டது. ஆட்சியாளர்களின் படோடாபங்களுக்கான மேடையாக சுதந்திரதின மேடை மாற்றப்பட்டுவிட்டது. அது மக்களுக்கான நாளாக அல்லாமல், நாட்டுக்கான நாளாக அல்லாமல், ஆட்சியாளர்களுக்கும், ஆயுதப்படைகளுக்குமான நாளாகவே மாறிவிட்டது. இதற்கு ஒட்டுமொத்தப் பொறுப்பாளிகள் இந்த நாட்டை ஆண்ட, ஆளுகிற அரசியல்வாதிகள் மட்டும்தான்.

சுதந்திரம் என்பது ஒரு பேருணர்வு. அதனால்தான் மனிதன் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள உயிரைக்கூடப் பணயம்வைக்கத் தயாராக இருக்கிறான். அத்தகைய சுதந்திரம் என்பது கொண்டாடப்பட வேண்டுமானால், அது ஒவ்வொரு மனிதனாலும் முதலில் உணரப்பட வேண்டும். சொந்த நாட்டு மக்களை, சொந்த நாட்டுக்குள்ளேயே அந்நியர்களாக உணரவைத்துவிட்டு, சுதந்திரத்தைக் கொண்டாடு என்றால், அது எப்படி முடியும்? இலங்கை என்ற அற்புதமானதொரு தீவை, ஆட்சியாளர்கள் எனும் அரசியல்வாதிகள் சீரழித்துவிட்டார்கள். அது ஒன்றுதான் இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணையும் புள்ளியாக இன்று இருக்கிறது.

## கடிதங்கள்

### விளையாட முடியவில்லை


தமிழ் விளையாட்டுக்கழகம்
NP/MUL/ODD/14
11.07.2018
V.P Foundation


முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய சாளம்பன், ,தட்டையமலை தமிழ் விளையாட்டு கழகத்தின் மைதானத்தினை சீர் திருத்தம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தட்டையர் மலை பிரதேசத்தில் பெரியசாளம்பன் பகுதியில் அமைந்துள்ள 2 ஏக்கர் பரப்பளவு கொண்ட தமிழ் விளையாட்டு குழகத்திற்கான ஒதுக்கப்பட்ட காணியில் கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் கிராம இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஆனால், தற்போது கொவிட் -19 தொற்று காரணமாக முடங்கிய நிலை காணப்பட்டதால் விளையாட்டிற்காக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானம் பூண்டுகள் முளைத்து பற்றைக்காடாக காணப்படுகின்றது. இதனை துப்பரவு செய்து தருமாறு விளையாட்டு கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

செ.கீதாஞ்சன்




5G பரிசோதனையை ஆரம்பிக்கிறது

# எயார்டெல்

வர்த்தக வலையமைப்பில் நேரடி 5G பரிசோதனைகளை மேற்கொள்வதாக அறிவித்துள்ளது. நாட்டில் இதுவரை பதிவு செய்யப்படாத அதிகூடிய இணையத்தள வேகத்தை பதிவு செய்துள்ளதாகவும், எயார்டெல் லங்கா 1.9 Gbpsக்கும் அதிகமான வேகத்தில் 5Gக்கான தயார்நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

“இலங்கையானது முன்னோடி தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் வரையறுக்கப்பட்ட ஒரு சந்தையாக இருப்பது மற்றும் எமது 5G திறன்களை அதிகரிப்பதற்கு இன்று நாம் செய்யும் முதலீடுகள் இலங்கையின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான டிஜிட்டல் அடித்தளத்தை அமைக்கும். இன்று அதற்கு சாட்சியாக, நாட்டிலேயே அதிக இணையத்தள வேகத்தை பதிவு செய்ய முடிந்தது, மேலும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும்போது சாதனைகளை முறியடிப்போம்.” என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆஷிஷ் சந்திரா தெரிவித்தார்.

“எங்கள் அதிவேக நெட்வொர்க் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும், மேலும் நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகவும் மலிவு விலையில் உலகத்தரம் வாய்ந்த நெட்வொர்க்கை வழங்குவதற்கான எங்கள் உட்பார்வைக்கு ஏற்ப உள்ளது. எயார்டெல்லில் உள்ள அனைவருக்கும் இது ஒரு சிறந்த தருணமாகும்.” என்று அவர் மேலும் கூறினார்.

தற்போதுள்ள தொழில்நுட்பங்களுடன் ஒப்பிடும்போது எயார்டெல் 5G, 10 மடங்கு வேகம், 10 மடங்கு குறைவான தாமதத்திறன் மற்றும் பல பணிகளை ஒரே நேரத்தில் செய்யும் 100 மடங்கு திறன் கொண்டதாக அமைந்திருப்பதாக நிறுவனம் அறிவித்துள்ளது. எயார்டெல் உலகின் புத்தாக்கமான மொபைல் மற்றும் வலையமைப்பு கண்டுபிடிப்பாளர்களில் ஒன்றாக இருப்பதுடன், வலையமைப்பு மேம்படுத்தல்களில் நிறுவனத்தின் கணிசமான முதலீடு காரணமாக 5G பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எயார்டெல் அதன் உலகத் தரம் வாய்ந்த 4G உட்கட்டமைப்பு நாடு முழுவதிலும் 5G தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது. இதனால் அடுத்த தலைமுறைக்கான வலையமைப்பிற்கு தடையற்ற மாற்றத்தை எளிதாக்கி, 3500 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில், தற்போதுள்ள தாராளமயமாக்கப்பட்ட ஒலி அலைக்கற்றையை (Spectrum) NSA (Non Stand Alone) வலையமைப்பு தொழில்நுட்பத்தின் மூலம் எயார்டெல்லுக்கு மேற்கொள்ள முடிந்ததாகவும் அறிவித்துள்ளது.




வவுனியா வைத்தியசாலையில் SLT-MOBITEL இன்

# தைப்பொங்கல் வைபவம் SLT-MOBITEL, இந்த ஆண்டின்

தைப் பொங்கல் வைபவத்தை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பாடு செய்திருந்தது. பண்டிகையின் பாரம்பரியத்தை பின்பற்றியிருந்ததுடன், வைத்தியசாலைக்கு பெறுமதி வாய்ந்த நன்கொடையையும் வழங்கியிருந்தது.

புதிய ஆரம்பம் மற்றும் இயற்கையின் அறுவடையை குறிக்கும் வகையில் தைப் பொங்கல் அமைந்துள்ளது. இந்த விசேட பண்டிகையை கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் SLT-MOBITEL இன் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். வைத்தியசாலை வளாகத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வைபவத்தின் போது, SLT இன் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்திய பொது முகாமையாளர் எம். பத்மசுதன், 1 மில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்த ICU படுக்கைகளை, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர். வைத்தியர். கே.ராகுலனிடம் கையளித்தார். தைப் பொங்கல் பண்டிகையின் பாரம்பரியத்துக்கமைய, பூசாரியினால் பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. SLT-MOBITEL பிரதிநிதிகள் மற்றும் வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

சமூகங்களின் நலன் தொடர்பில் வைத்தியசாலையின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளின் அங்கமாக SLT-MOBITEL’இன் நன்கொடை அமைந்திருந்தது. தொற்றுப் பரவல் ஆரம்பித்தது முதல், SLT-MOBITEL இனால் தொடர்ச்சியாக அதன் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டு, இலங்கையின் சகல பகுதிகளிலும் இணைப்புத்திறன் உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் சுகாதாரத் துறைக்கு அத்தியாவசிய சாதனங்களை வழங்கி மற்றும் இதர நன்கொடைகளினூடாக ஆதரவளித்திருந்தது.

கர்நாடகா

‘பர்தா’ விவகாரம்

# பூதாகரமாக வெடித்தது

## காவி துண்டுகளை அணிந்து வரும் மாணவர்கள்



கர்நாடகாவில் முதலமைச்சர் பசவராஜ் தலைமையில் பா.ஜ.க வின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் அங்குள்ள உடுப்பி அரசு மகளிர் பல்கலைக்கழகத்தில், கடந்த மாதம் முஸ்லிம் மாணவிகள் அறுவர் பர்தா அணிந்து வகுப்பிற்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பல்கலைக்கழகத்தின் சீருடை விதிகளின்படி, வளாகம் வரை முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து வர அனுமதி உள்ளது.

எனினும் குறித்த ஆறு மாணவிகள் வகுப்பறைக்குள் பர்தா அணிந்து வந்ததால், விதிமுறையை சுட்டிக் காட்டி அவர்களை அப் பல்கலைக்கழக நிர்வாகம் வெளியேற்றியது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே கல்லூரி நிர்வாகத்தைக் எதிர்த்து மாணவியர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ் வழக்கு நாளை (8) விசாரணைக்கு வர உள்ள நிலையில் உடுப்பியை தொடர்ந்து மேலும் பல நகரங்களில் முஸ்லிம் மாணவியர் பர்தா அணிந்து வர ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஹிந்து மாணவ - மாணவியர் கழுத்தில் காவித் துண்டுடன் வகுப்பறைக்கு வருகை தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே முஸ்லிம் மாணவியர் பர்தா அணிந்து வர அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி, கர்நாடகாவில் காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் ஏராளமான முஸ்லிம் மாணவியர் பங்கேற்றனர். இந்த போராட்டத்தால் பல இடங்களில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த விவகாரம் காங்., - பா.ஜ., தலைவர்கள் இடையே மோதலுக்கு வழி வகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



குஜராத்

# 8 மாத சிசுவை வீசிய பராமரிப்பாளர்

## தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

பெண் பராமரிப்பாளர் ஒருவர் 8 மாத சிசுவை கடுமையாகத் தாக்கி தூக்கி வீசிய சம்பவம் குஜராத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத்தின் சூரத்தைச் சேர்ந்தவர் மித்தேஷ் பட்டேல். அவரும் அவரது மனைவியும் தனியார் அலுவலகமொன்றில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதனால் அவர்களுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்வதற்காக கடந்த செப்டம்பர் மாதம் குழந்தை பராமரிப்பாளர் ஒருவரை நியமித்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பட்டேல் தனது அலுவலகத்தில் இருந்த போது அவரது தாயார் தொலைபேசியில் தொடர்புகொண்டு ” அவரது இரட்டைக் குழந்தைகளில் ஒன்று அழுதுக்கொண்டே இருந்ததாகவும், பின்னர் திடீரென மயங்கிவிட்டதாகவும், இதனால் அக் குழந்தையை அக்கம்பக்கத்தினர் உடனடியாக மருத்துவமனை அழைத்துச்சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



ஜம்மு காஸ்மீர்

# உலகின் மிகப்பெரிய இக்ளூ உணவகம்



ஜம்மு காஷ்மீரின் பனிப்பிரதேசமான குல்மார்க் பகுதியில் உலகின் மிகப்பெரிய இக்ளூ உணவமொன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

இக்லூ (Igloo) என்பது பனிக்கட்டிகளைக்கொண்டு கட்டப்படும் வீடுகளாகும். ஆர்க்டிக் பகுதிகளில் வாழ்கின்ற எஸ்கிமோவர்கள் இவ்வாறான வீடுகள் கட்டப்படுகின்றன.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரின் குல்மார்க் பகுதியில் சுமார் 37 .5 அடி உயரமும் 44 .5 அடி அகலமும் கொண்ட பனியால் குறித்த உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணவகத்தில் சுமார் 40 பேர் வரை அமர்ந்து உணவு உண்ணலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்விட்சர்லாந்தில் இதுபோன்ற சில உணவகங்கள் இருப்பதை அறிந்து தாம் உலகின் மிகப் பெரிய பனிவீடு உணவகத்தை அமைக்க திட்டமிட்டதாகவும் தற்போது இவ்வுணவகமானது சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளதாகவும் இதனை வடிவமைத்த சையத் வாசிம் ஷா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மும்பை

# லதா மங்கேஷ்கர் காலமானார்

இந்தியாவின் இசைக்குயில் என அழைக்கப்படும் புகழ்பெற்ற பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர், உடல் நலக் குறைவு காரணமாக மும்பை மருத்துவமனையில் நேற்றுக் (06) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 92 ஆகும்.

1929ஆம் ஆண்டு இந்தூரில் பிறந்த லதா மங்கேஷ்கர், எழுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் திரையுலகில் மராத்தி, இந்தி, தமிழ் உள்ளிட்ட 36 இந்திய மொழிகளில் முப்பதாயிரம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார்.

திரைத்துறை சாதனைக்காக அவருக்கு 1989ஆம் ஆண்டு இந்திய அரசால் தாதா சாகேப் பால்கே விருதும், 2001ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூப்பு, உடல்நலக் குறைவு ஆகியவற்றின் காரணமாகக் கடந்த மாதம் மு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.



புதுடெல்லி

# ரயில்களில் கெமரா

ரயில்களில் கெமராக்களைப் பொருத்த, இந்திய ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

ரயில் பயணத்தின் போதும் ஓட்டுனர் மற்றும் மோட்டார் மேன் ஆகியோரின் செயல்பாடுகளை கண்காணிக்கும் நோக்கிலும், விபத்து ஏற்பட்டால் அது குறித்து தெரிந்து கொள்ளும் வகையிலும், பெண்களின் பாதுகாப்புக் கருதியும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் முதல் கட்டமாக, தொலைதூர ரயில்களில் உள்ள என்ஜின்களில் சிசிடிவி கெமராக்கள் பொறுத்தப்படவுள்ளதாகவும், அத்துடன் உள்ளூர் ரயில்களில் மோட்டார் மேன் (ஓட்டுநர்) அறையில் சிசிடிவி கெமெராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொரோக்கோ



## ஆழ்துளை கிணற்றில் விழுந்த

# சிறுவன் உயிரிழப்பு

5 வயதுச் சிறுவன், ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்துவிட்டார். 5 நாட்கள் மீட்புப் போராட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் (05) உயிரிழந்த சம்பவம் மொரோக்கோவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மொராக்கோவில் மட்டுமன்றி முழு உலகையும் சோகத்தில் மூழ்க செய்துள்ளது.

மொராக்கோவின் வடக்கு பகுதியில் இகரா என்ற கிராமம் அருகே 100 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்கிழமை ராயன் அவ்ரம் என்ற சிறுவன் இதில் விழுந்து சிக்கிக் கொண்டான்.

உடனடியாக அந்த பகுதிக்கு விரைந்த மீட்புக் குழுவினர் இயந்திரங்களின் உதவியுடன் நிலத்தை தோண்டும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டு வந்ததோடு , குழாய் மூலம் தண்ணீர் மற்றும் ஒட்சிசனையும் வழங்கியுள்ளனர்.

அந்த சிறுவன் மீட்பு நடவடிக்கை உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்தது. எனினும் பாறைகள் காரணமாகவும், நிலச்சரிவு அச்சுறுத்தலாலும் பணிகள் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் நீண்ட போராட்டத்திற்கு பின்னர் உயிரற்ற சிறுவன் உடல் மீட்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தாய்லாந்து



## கஞ்சாவால் வெட்டப்பட்ட ஆணுறுப்பு

நபர் ஒருவர் தனது ஆண் உறுப்பை தானே துண்டித்த சம்பவம் தாய்லாந்தில் இடம்பெற்றுள்ளது.

கஞ்சா - புகைப்பழத்திற்கு அடிமையான நபரொருவர் கடந்த 3 மாதங்களாக கஞ்சா புகைக்கும் பழக்கத்தை நிறுத்தியுள்ள நிலையில், அண்மையில் மீண்டும் கஞ்சாவைப் புகைத்துள்ளதாகவும், இதன் போது அவருக்கு பாலியல் எண்ணம் இல்லாமலேயே ஆணுறுப்பில் விறைப்பும் வலியும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வலியை போக்க அவர் கத்தரிக்கோலால் தனது ஆணுறுப்பை முழுவதுமாக துண்டித்துள்ளதாகவும், இரண்டு மணிநேரம் சென்ற நிலையில், இரத்தம் நிற்கவில்லை எனவும் இதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் வைத்தியசாலையில் அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு ரத்தப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டதுடன் , அவரது விதைப்பையிலும் காயம் ஏற்பட்டிருந்ததாகவும் , 2 செ.மீ. மட்டுமே ஆண்குறி சதை மீதம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மருத்துவர்கள்

”கடந்த 20 ஆண்டுகளில் மனநல பாதிப்பு காரணமாக ஆண்கள் தங்களது பிறப்புறுப்பை சிதைத்துகொள்வது தொடர்பாக 100 சம்பவங்கள் வரை நடைபெறுள்ளன எனவும், எனினும், கஞ்சா போதையால் ஏற்பட்ட மனநல பாதிப்பால் ஆணுறுப்பை சிதைத்துகொள்வது என்பது மிகவும் அரிது ”எனவும் தெரிவித்துள்ளனர்.

பெலாரஸ்

## யுவதியின் வாழ்க்கையை முடித்த தலைமுடி



நீளமான தலைமுடியால் யுவதியொருவர் உயிரிழந்த சம்பவம் ஐரோப்பிய நாடான பெலாரஸில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உமிடா நசரோவா என அழைக்கப்படும் 21 வயதான குறித்த யுவதி, வெல்டிங் கம்பிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றில் புதிதாக வேலையில் இணைந்துள்ளார்.

இந்நிலையில் நீளமான தலைமுடியை கொண்ட அவர் அதை பின்னாமல் பணிபுரிந்துள்ள நிலையில், எதிர்பாராத விதமாக அங்கிருந்த இயந்திரமொன்றினுள் அவரது தலைமுடி சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நீண்ட நேர முயற்சியின் பின்னர் அவரது தலை குறித்த இயந்திரத்திலிருந்து விடுவிக்கப்படவே பலத்த காயங்களுடன் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுமார் 20 நாட்கள் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இழப்பைத் தொடர்ந்து அவரின் இறுதிச் சடங்கிற்கான மொத்த செலவையும் தொழிற்சாலை ஏற்று கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அலட்சிய மனப்பான்மை காரணமாக தனது கடமையை முறையாக செய்யாமல் விட்ட குற்றத்திற்காக தொழிற்சாலையின் உற்பத்தி தலைவருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்கொரியா

## அசரவைக்கும் ‘கோஸ்க்’






மூக்கை மாத்திரம் மூடக்கூடிய வகையில் ‘கோஸ்க்“(kosk )என்ற புதிய முகக் கவசத்தை தென்கொரியாவைச் சேர்ந்த அட்மான் என்ற நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

மேலும் இம் முகக் கவசத்தின் மூலம் மூக்கையும் வாயையும் மூட முடியும் எனவும், தேவை ஏற்படும் போது அதனை மடித்து மூக்கை மாத்திரம் மூடியவாறு பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை பொதுவாக ஹோட்டல்கள் மற்றும் ரெஸ்ராரண்ட்களில் பயன்படுத்திக் கொள்வதற்காகவே உருவாக்கப்பட்டதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுமார் 0.3 மைக்ரான் அளவு சிறிய துகள்களையும், கிருமிகளையும் தடுக்கக் கூடிய அளவில் 80 சதவீத செயல்திறன் கொண்டதாக இம்முகக் கவசம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து






## கணவரை ஏலத்தில் விற்க விளம்பரம் கொடுத்த மனைவி

பெண் ஒருவர் தனது கணவரை ஏலத்தில் விற்க விளம்பரம் கொடுத்த விநோத சம்பவம் நியூசிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

தன்னையும், குழந்தைகளையும் 2 நாட்கள் தனியாக வீட்டில் விட்டுவிட்டு, நண்பர்களுடன் மீன் பிடிக்க சென்றுவிட்ட கோபத்தில், லிண்டா மெக் அலிஸ்டர் என்ற குறித்த பெண் ஒன்லைனில் தனது கணவரை விற்பனை செய்ய இருப்பதாக, அவரின் உயரம், கணவருக்கு பிடித்தவற்றையை குறிப்பிட்டு விளம்பரம் வெளியிட்டிருந்தார்.




# சம்பியனானது இந்தியா

நடைபெற்றுவந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனானது.

அன்டிகுவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் வென்றே இந்தியா சம்பியனாகியிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 189/10 (44.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேம்ஸ் றீயூ 95 (116), ஜேம்ஸ் சேல்ஸ் ஆ.இ 34 (65), ஜோர்ஜ் தோமஸ் 27 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ராஜ் பவா 5/31 [9.5], ரவி குமார் 4/34 [9], கௌஷால் தம்பே 1/29 [5])

இந்தியா: 195/6 (47.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிஷாந்த் சிந்து ஆ.இ 50 (54), ஷெய்க் ரஷீட் 50 (84), ராஜ் பவா 35 (54), ஹர்னூர் சிங்க் 21 (46), யஷ் டுல் 17 (32), தினேஷ் பனா ஆ.இ 13 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோஷுவா பொய்டன் 2/24 [7], தோமஸ் அஸ்பின்வோல் 2/42 [9], ஜேம்ஸ் ஸேல்ஸ் 2/51 [7.4], டொம் பிரஸ்ட் 0/29 [10], றெஹான் அஹ்மட் 0/32 [10])

போட்டியின் நாயகன்: ராஜ் பவா

## ஜஸ்டின் லாங்கர் இராஜினாமா



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து ஜஸ்டின் லாங்கர் (Justin Langer) இராஜினாமா செய்துள்ளார்.

அவரது ஒப்பந்தத்தை குறுகிய தவணைக்கு நீடிப்பதாக வழங்கப்பட்ட சலுகையை நிராகரித்து, தனது பதவியை அவர் இராஜினாமா செய்துள்ளார்.

ஜஸ்டின் லாங்கரின் முகாமைத்துவ நிறுவனத்தினால் இன்று காலை இந்த அறிவிப்பு வெளியாகியது.

குறித்த அறிவிப்பிற்கு முன்னதாக நடைபெற்ற அவுஸ்திரேலிய கிரிக்கெட் சம்மேளனத்துடனான பேச்சுவார்த்தைகள் தீர்வுகளின்றி நிறைவிற்கு வந்திருந்தன.




### இலங்கை சதுரங்க சம்மேளனத் தொடர்:

## தேசிய மட்டத்துக்குத் தெரிவான ஸஹ்மி

எம்.என்.எம். அப்ராஸ்

இலங்கை சது ரங்க சம்மேளனத்தின் Sri Lanka National Novice Chess Championship-2022 தொடரானது, நிந்தவூர் அல் அஸ்ரக் தேசி ய பாடசாலையில் அண்மையில் அம்பாறை மாவட்டம் சார்பாக நடைபெற்றது.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

## இன்டர் மிலனை வென்ற ஏ.சி மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சான் சிரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இன்டர் மிலனுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் வென்றது.

ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஒலிவியர் ஜிரூட் பெற்றதோடு, இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை இவான் பெரிசிச் பெற்றிருந்தார்.

றோமாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஜெனோவா சமப்படுத்தியிருந்தது.



## யாழ்ப்பாணத்தில் இந்துகாதேவிவுக்கு கௌரவம்

எஸ். நிதர்ஷன்

பாகிஸ்தானில் நடந்த சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கணேஷ் இந்துகாதேவியை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கணேஷ் இந்துகாதேவிக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு பதக்கங்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 07 பெப்ரவரி 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.